பக்கங்கள்:-19

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | மார்கழி 23 | வெள்ளிக்கிழமை | 09.01.2026 | அதிர்வு 162

ஹறிணிக்கு எதிரான

## பிரேரணை மண்கவ்வும்

லால் காந்த உறுதி



கல்வி அமைச்சரான பிரதமர் கலாநிதி ஹறிணி அமரசூரியவுக்கு எதிராக எதிரணிகளால் முன்வைக்கப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை தேவையற்றது 06




# அரசியல் தீர்வு குறித்து ஜனாதிபதி மௌனம்!

## வெளிவிவகார அமைச்சரின் கூற்றை எப்படி நம்புவது என்று சுரேஷ் கேள்வி

(எஸ்.நிதர்ஷன்)

"ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு என்ன என்பது பற்றி இதுவரை வாய் திறந்து பேசவில்லை. இந்நிலையில் தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு காணப்படும் என்று வெளிவிவகார அமைச்சர் இப்போது கூறுவதை எப்படி நம்புவது?"

- இவ்வாறு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஊடகப் பேச்சாளரும் அந்தக் கூட்டணியின் பங்காளிக் கட்சியான ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் தலைவருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் கேள்வி எழுப்பினார். 06

# எனக்கு எதிரான பிரேரணை படுதோல்வியடைவது உறுதி

## மகாநாயக்க தேரர்களைச் சந்தித்த பின்னர் பிரதமர் தெரிவிப்பு



தனக்கு எதிராக எதிரணிகளால் முன்வைக்கப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் பிரதமர் கலாநிதி ஹறிணி அமரசூரிய மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளார். இந்தப் பிரேரணை படுதோல்வியடைவது உறுதி என்றும் அவர் கூறியுள்ளார்.

"இந்தப் பிரேரணை மூலம் கல்வி மறுசீரமைப்பு தொடர்பில் கலந்துரையாடுவதற்கு மேலும் வாய்ப்பு கிட்டும்." – என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கண்டிக்கு நேற்று வியாழக்கிழமை விஜயம் மேற்கொண்ட பிரதமர் கலாநிதி ஹறிணி அமரசூரிய அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீடங்களின் மகாநாயக்க தேரர்களைச் சந்தித்துக் 05




அரசமைப்புக் கவுன்ஸில் உறுப்பினர் பதவியில் இருந்து விலகும்படி தமிழரசு கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிவஞானம் சிறிதரனுக்கு பணிப்புரை விடுத்து, கட்சியின் அரசியல் குழு எடுத்த தீர்மானம் நேற்று முன்தினம் திகதியிட்டு அவருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

சிறிதரனின் கிளிநொச்சி, வட்டக் கட்சி முகவரிக்கு இது தொடர்பான கடிதத்தைப் பதிவுத் தபாலில் அனுப்பி வைத்திருக்கின்றார் கட்சியின் பொதுச் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன்.

அரசமைப்பு கவுன்ஸிலில் சிறிதரனின் நடத்தை தொடர்பாக அரசியல் குழு ஆராய்ந்து கண்ட விடயங்களை இந்தக் கடிதத்தில் சுமந்திரன் விலாவாரியாக விவரித்திருக்கின்றார் எனத் தெரிகிறது.

"இந்தப் பின்புலத்தில் இந்தப் பதவியில் தொடர்வது உங்களுக்கும் சங்கடம். கட்சிக்கும் சங்கடமான விளைவுகளை ஏற்படுத்தும். ஆகையினால் 06




# கச்சதீவுத் திருவிழா பெப்ரவரி 27, 28ஆம் திகதிகளில் இரு நாடுகளிலிருந்தும் தலா 4 ஆயிரம் பக்தர்கள்

(எஸ்.நிதர்சன்)

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா தொடர்பான முன்னாயத்த கலந்துரையாடல் நேற்றுக் காலை யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் மாவட்ட செயலாளர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் இடம்பெற்றது.

வரலாற்றுச் சிறப்புமிக்க கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா எதிர்வரும் பெப்ரவரி மாதம் 27ஆம், 28ஆம் திகதிகளில் நடைபெற இருக்கின்றது.



இவ்வருடம் இலங்கையிலிருந்து 4,000 பக்தர்களும் இந்தியாவில் இருந்து 4,000 பக்தர்களும் பங்குபற்ற அனுமதிப்பது என தீர்மானிக்கப்பட்டுள்ளது. பங்குபற்றுவோருக்கான சுகாதாரம், போக்குவரத்து உட்பட அடிப்படை வசதிகள், பாதுகாப்பு, ஏற்பாடுகள் மற்றும் உணவு வழங்கள் போன்ற பல்வேறுபட்ட விடயங்கள் தொடர்பில் நேற்றைய கூட்டத்தில் ஆராயப்பட்டது.

கூட்டத்தில், யாழ். மறை மாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை ஜோசப்தாஸ் ஜெயரட்ணம் அடிகளார், யாழ் இந்திய துணைத் தூதரக அதிகாரிகள், கடற்படை மற்றும் இராணுவ அதிகாரிகள், பொலிஸார், யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆறுமுகம் கேதீஸ்வரன், நெடுந்தீவு பிரதேச செயலாளர், நெடுந்தீவு பிரதேச சபை தவிசாளர், துறைசார் திணைக்களின் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

# கிழக்கில் மழை மற்றும் காற்றினால் மின் தடை ஏற்படும் சாத்தியமுண்டு!

(கனகராசா சரவணன்)

வங்காள விரிகுடாவின் தென்கிழக்காக உருவாகியுள்ள குறைந்த காற்றமுத்த தாழ்வு நிலையால் கிழக்கு மாகாணத்தில் பல பகுதிகளில் நேற்று 8 ஆம் திகதி தொடக்கம் நாளை 10ம் திகதி வரை அதிகளவிலான மழையுடன் பலத்த காற்று வீசும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே மின்தடை நேரக் கூடிய வாய்ப்பு ஏற்படும். இதனைக் கருத்தில் கொண்டு மக்களைத் தயார் படுத்துமாறு மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எஸ். அருள்ராஜ் கோரிக்கை விடுத்துள்ளார்.

சீரற்ற காலநிலை தொடர்பாக மட்டக்களப்பு அரசாங்க அதிபர் நேற்று வியாழக்கிழமை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

வளிமண்டல திணைக்களத்தின் ஏதிர்வு கூறலின் பிரகாரம் வங்காள விரிகுடாவின் தென்கிழக்காக உருவாகியுள்ள குறைந்த காற்றமுத்த தாழ்வு நிலையால் 8ஆம் திகதி (நேற்று) வியாழக்கிழமை தொடக்கம் நாளை 10 ஆம் திகதி சனிக்கிழமை வரையில் 100 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி கிட்டலாம். 60 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசும்



என வளிமண்டல திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

எனவே இதன் காரணமாக இடைக்கிடையே மின்சார தடை ஏற்பட வாய்ப்புகள் காணப்படுகின்றன. எனவே பொது மக்கள் இதனை கருத்தில் கொண்டு தங்களது தயார்படுத்தல் மற்றும் ஒருங்கிணைப்பு நடவடிக்கையை விரைவாக முன்னெடுக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். வானிலை அறிக்கை தொடர்பில் அவதானமாக இருக்குமாறும் கேட்டுக் கொள்கிறோம். - என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# கடற்படையினரின் பிடியிலுள்ள முள்ளிக்குளம் கிராமத்தை விடுவிக்கும் ரவிகரனின் கோரிக்கை ஜனாதிபதியால் ஏற்பு!












**(விஜயரத்தினம் சரவணன்)**

கடற்படையினரின் ஆக்கிரமிப்பிலுள்ள மன்னார் - சிலாவத்துறை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட முள்ளிக்குளம் கிராமத்தை விடுவித்து, தமது பூர்வீக வாழ்விடங்களில் மீள்குடியமர்வதற்கு காத்திருக்கும் முள்ளிக்குளம் கிராம மக்களை மீள்குடியமர்த்துவதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவிடம் வலியுறுத்தியுள்ளார்.

இந்நிலையில் முள்ளிக்குளத்தில் கடற்படையின் ஆக்கிரமிப்பிலுள்ள மக்களின் காணிகளை விடுவிப்பதற்கு கடற்படை இணக்கம் தெரிவித்துள்ளது.

அத்தோடு எதிர்வரும் 15ஆம் திகதி தாம் மன்னாருக்கு வருகைதரும்போது இந்த முள்ளிக்குளம் காணிவிடுவிப்பு தொடர்பிலும் கலந்துரையாடவுள்ளார் என ஜனாதிபதியினாலும் பதில் வழங்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று முந்தினன் ஜனாதிபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சர் அநுரகுமார திஸநாயக்கவின் தலைமையில் பாதுகாப்பு அமைச்சின் அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்கூட்டம் இடம்பெற்றது. இக்கூட்டத்திலேயே இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

மேலும் இதுதொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் -

மன்னார் - சிலாவத்துறை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட முள்ளிக்குளம் கிராமம் மீள்குடியமர்த்தப்படவேண்டுமென ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளேன்.

அத்தோடு முள்ளிக்குளம் மக்களின் நிலமைகள் தொடர்பிலும் இதன்போது தெளிவுபடுத்தினேன். அந்த வகையில் முள்ளிக்குளம் கிராமத்தில் வாழ்ந்த 400 வரையான குடும்பங்கள் கடந்த 1990ஆம் ஆண்டு தமது சொந்த இடங்களிலிருந்து இடம்பெயர்ந்தனர் என்பதையும், அதன்பின்னர் கடந்த 2002ஆம் ஆண்டு 300 வரையான குடும்பங்கள் மீண்டும் தமது சொந்த இடங்களில் மீளக்குடியேறியமையுடன், அதில் 150 வரையான குடும்பங்களுக்கு வீடுகளும் அமைத்துக்கொடுக்கப்பட்டிருந்தன என்பதையும் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளேன்.

இதேவேளை அசாதாரண சூழ்நிலை காரணமாக மீண்டும் கடந்த 2007ஆம் ஆண்டு முள்ளிக்குளம்கிராம மக்கள் மீளவும் தமது பூர்வீக வாழ்விடத்திலிருந்து இடம்பெயர்ந்தபோதிலும் இதுவரை அந்த மக்கள் மீளக்குடியமர்த்தப்படவில்லை என்பதையும் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவந்திருந்தேன்.

இத்தகைய சூழலில் முள்ளிக்குளம் கிராமமக்கள் அயற் கிராமங்களான காயாக்குழி மற்றும் மலைக்காடு ஆகிய கிராமங்களில் பலத்த சிரமங்களுடன் வாழ்ந்து வருகின்றார்கள் என்பதையும், கடந்த 2002ஆம் ஆண்டு மீள்குடியேற்றத்தின்போது முள்ளிக்குளத்தில் அந்த மக்களுக்கு அமைத்துக்கொடுக்கப்பட்ட வீடுகளில் தற்போது கடற்படையினரது குடும்பங்கள் தங்கவைக்கப்பட்டுள்ளன என்பதையும் இக்கூட்டத்தில் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியுள்ளேன்.

இந்நிலையில் முள்ளிக்குளத்தில் இயங்கிவரும் பாடசாலைக்கும் அங்குள்ள பரலோக மாதா தேவாலயத்திற்கும் மலைக்காடு, காயாக்குழி கிராமங்களில் தங்கியுள்ள முள்ளிக்குளம் கிராமத்தை பூர்வீகமாகக் கொண்ட மக்களும், மாணவர்களும் சென்று வருகின்றார்கள் என்பதையும் ஜனாதிபதியிடம் தெரிவித்திருந்தேன்.

இருப்பினும் முள்ளிக்குளம் கிராமத்தில் கடற்படையினரது ஆக்கிரமிப்பிலுள்ள குடியிருப்புக்காணிகள், தோட்டக்காணிகள், வயற்காணிகள், குளங்கள், கடற்றொழிலுக்காக மீனவர்களால் பயன்படுத்தப்படும் இறங்குதுறைகள் என எவையும் இதுவரை விடுவிக்கப்படவில்லை என்பதையும் இதன்போது ஜனாதிபதியிடம் தெரியப்படுத்தியிருந்தேன்.


எனவே தமது பூர்வீக வாழ்விடங்களில் மீள்குடியேறுவதற்காக எதிர்பார்த்துக் காத்திருக்கும் முள்ளிக்குளம் கிராம மக்களை உடனடியாக மீளக் குடியமர்த்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் வலியுறுத்தியிருந்தேன்.

இந்நிலையில் அக்கூட்டத்தில் கலந்துகொண்டிருந்த கடற்படை அதிகாரி பதிலளிக்கையில் -


முள்ளிக்குளத்தில் ஒருபகுதிக் காணி மக்களுடைய காணிகள் எனத் தம்மால் அறியமுடிவதாகத் தெரிவித்தமையுடன், அந்த மக்களுடைய காணிகளை விடுவிக்கக்கூடிய நிலையிருப்பதாகவும் தெரிவித்தார்.

கூடிய விரைவில் முள்ளிக்குளத்தில் கடற்படையினரின் கையகப்படுத்தலில் உள்ள மக்களின் காணிகளை விடுவிப்பது தொடர்பான முடிவுகள் தம்மால் அறிவிக்கப்படுமெனவும் அந்த கடற்படை அதிகாரியினால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதேவேளை எதிர்வரும் 15ஆம் திகதி தாம் மன்னாருக்கு வருகைதரவுள்ளதாகத் தெரிவித்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, அவ்வாறு மன்னாருக்கு வருகைதரும்போது முள்ளிக்குளம் காணிவிடுவிப்புத் தொடர்பிலும் கலந்துரையாடவுள்ளார் எனவும் தெரிவித்திருந்தார் - என்றார்.



சில மாதிரிகள் காட்டும் நகர்வுப் பாதை



சில மாதிரிகள் காட்டும் நகர்வுப் பாதை.

# மிக மோசமான காலநிலைக்கு வாய்ப்புள்ளதாக எதிர்வு கூறல்

## பாதிப்பை எதிர்கொள்ளும் பிரதேச விவரம் இன்றே தெரியும்

**(எஸ்.கீதபொன்கலன்)**

தற்போது ஏற்பட்டுள்ள வானிலை மாற்றம் குறித்து மீண்டும் ஒரு ஆபத்தான நிலை என நேற்று வியாழக்கிழமை மாலை 5.30 மணிக்கு பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா விடுத்துள்ள அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

அந்த அறிவிப்பின் விவரம் வருமாறு:-

வங்காள விரிகுடாவில் இலங்கைக்கு தென் கிழக்கே பொத்துவிலில் இருந்து 236 கி.மீ. தென்கிழக்கு திசையில் காணப்படும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் தொடர்ச்சியாக வலுப்பெற்று வருகின்றது. இது தொடர்ச்சியாக மேற்கு வடமேற்கு திசை நோக்கி நகர்ந்து வருகின்றது.

ஆரம்பத்தில் மாதிரிகளிடையே அதன் நகர்வுப் பாதை தொடர்பில் ஒருமித்த கருத்து காணப்பட்டது. ஆனால் தற்போது மாதிரிகள் இரண்டு வகையான நகர்வுப் பாதைகளைக் காட்டுகின்றன.

நகர்வு 1 - ஏற்கனவே இருந்தது போன்று இலங்கையின் கிழக்குக் கரையை அண்மித்து பின் வடக்கு திசை நோக்கி நகர்ந்து, அதன் பின்னர் நாளை 10 ஆம் திகதியன்று மாலை மன்னார் வளைகுடா கடற்பகுதிக்குள் பிரவேசித்தல்.

நகர்வு 2 - இலங்கையின் கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்புக்கும் அம்பாந்தோட்டைக்கும் இடையில் நிலப் பகுதிக்குள் இன்று 9 ஆம் திகதி இரவு அல்லது நாளை 10 ஆம் திகதியன்று அதிகாலை பிரவேசித்தல்.

நகர்வு 1 இன் ஊடாக பயணித்தால் வடக்கு மாகாணம் நான் முன்னரே குறிப்பிட்டபடி எதிர்வரும் 12 ஆம் திகதி வரை மிக மிகக் கனமழையைப் பெறும்(04 நாள் திரட்டிய மழை வீழ்ச்சி 600 மி.மீ. இனை விட அதிகம்).

நகர்வு 2 இன் ஊடாக பயணித்தால் வடக்கு மாகாணம் கனமான 200 மி.மீ. திரட்டிய மழை வீழ்ச்சியைப் பெறும். ஆனால் கிழக்கு மாகாணம் எதிர்வரும் 13 ஆம் திகதி வரை (05 நரிகள்) 350 மி.மீ.இனை விட கூடுதலான திரட்டிய மழைவீழ்ச்சியைப் பெறும்.

நகர்வு 2 இன் படி இந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் நகர்ந்தால் மத்திய மாகாணம் ஊவா மாகாணம் என்பன 300 மி.மீ. இனை விட கூடுதலாகத் திரட்டிய மழை வீழ்ச்சியைப் பெறும்.

ஆனால் நகர்வு 1 ஐ விட நகர்வு 2 இலங்கைக்கு - குறிப்பாக கிழக்கு, ஊவா, மத்திய சப்ரகமுவா, வட மத்திய, வடமேல் மற்றும் தென் மாகாணங்களுக்கு - மீளவும் பாதிப்பை ஏற்படுத்தும்.

நகர்வு 2 இன் மையப் பகுதியாக மத்திய, ஊவா மற்றும் சப்ரகமுவா மாகாணங்கள் அமையும் என்பதனால் மேற்குறிப்பிட்ட மாகாணங்களில் குறிப்பாக கண்டி, மாத்தளை, நுவரெலியா, பதுளை, கேகாலை, குருநாகல் மாவட்டங்களில் நிலச்சரிவு நிகழ்வுகளுக்கான அதி கூடிய வாய்ப்புக்கள் உள்ளன.

ஆனால் இந்த நிகழ்வின் நகர்வு பற்றிய இறுதி முடிவை இன்று 9 ஆம் திகதி காலையே தீர்மானிக்க முடியும்.

மத்திய மலைநாட்டை சேர்ந்தவர்கள் மிகவும் அவதானத்துடன் இருக்க வேண்டும். நகர்வு 2 உறுதியானால் மீளவும் மலையகத்தின் பல பகுதிகள் நிலச்சரிவு அபாயத்தை எதிர்கொள்ளும். ஆகவே இது தொடர்பாக மிக மிக முன்னெச்சரிக்கையாகவும் விழிப்பாகவும் இருக்க வேண்டும் எனவும் இந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் தொடர்பான விவரங்கள் தொடர்ச்சியாக இற்றைப்படுத்தப்படும் எனவும் பேராசிரியர் நா.பிரதீபராஜா மேலும் தகவல் தெரிவித்துள்ளார்.

# நீர்கொழும்பு சிறையில் இருந்து மட்டு. சிறைக்கு மாற்றப்பட்ட கைதியிடம் ஐஸ் போதைப் பொருள்

**(கனகராசா சரவணன்)**

நீர்கொழும்பு சிறைச்சாலையில் சக கைதியை ஊசியால் குத்திய குற்றத்துக்காக அங்கிருந்து மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு கொண்டுவரப்பட்ட சிறைக் கைதியிடம் இருந்து நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு மட்டக்களப்பு சிறைச்சாலை அதிகாரிகள் 128 மில்லிக் கிராம் ஐஸ் போதைப்பொருளை மீட்டனர். அதை அடுத்து அவரைத் தாங்கள் கைது செய்துள்ளனர் என மட்டு. தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு கிருலப்பனை பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் குற்றச் செயல் ஒன்றின் காரணமாகக் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்திக் ஆஜரபடுத்தப்பட்டு, அவருக்கு சிறை தண்டனை வழங்கப்பட்டது. அவர் நீர்கொழும்பு சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருந்த போது சக கைதி ஒருவருக்கு ஊசியால் குத்திய சம்பவம் தொடர்பாக சிறைச்சாலை அதிகாரிகள் நீதிமன்றிற்கு அறிவித்தனர்.

இதனையடுத்து அந்தஜ் கைதியை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது அவரை நீதிவான் மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு மாற்றுமாறு உத்தரவிட்டார். அதையடுத்து அவர் அங்கிருந்து சிறைச்சாலை பஸ்ஸில் ஏற்றப்பட்டு மட்டக்களப்புக்கு சிறைக்கு நேற்று முன்தினம் இரவு கொண்டுவரப்பட்டார்.

சிறைச்சாலைக்குள் கொண்டு செல்வதற்கு முன்னர் சிறைச்சாலை அதிகாரிகள் அவரை சோதனையிட்ட போது அவரின் உடமையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 128 மில்லிக்கிராம் ஐஸ் போதைப் பொருளை கண்டுபிடித்து மீட்டனர்.

இதனை தொடர்ந்து அந்நபரை பொலிஸார் கைது செய்து சிறையில் தடுத்து வைத்தனர். அதை தொடர்ந்து அந்த நபர் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் நேற்று வியாழக்கிழமை ஆஜர்படுத்தப்பட்ட போது அவரை 14 நரிகள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இதேவேளை இந்த நபர் நீர்கொழும்பு சிறைச்சாலை கைதிகள் கூடத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது, உறவினர் சந்திப்பு சமயம் அவருக்கு போதை பொருள் கிட்டியிருக்கலாம். அல்லது எந்த வழியில் அவருக்கு அது கிடைத்திருக்கும் என்ற பலவேறு கோணங்களில் விசாரணைகளை மட்டு. தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# எனக்கு எதிரான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கலந்துரையாடினார்.

இலங்கை அரசியல் களத்தில் பேசுபொருளாக மாறியுள்ள கல்வி விவகாரம் தொடர்பில் பிரதமர் மகாநாயக்க தேரர்களுக்குத் தெளிவுபடுத்தினார்.

“எதிர்காலத்தில் பாடப்புத்தகங்களை அச்சிடும் பொறுப்பு கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படும். சர்ச்சைக்குரிய பாடத்திட்டம் (தரம் 6 ஆங்கிலம்) எந்தவொரு மாணவருக்கும் வழங்கப்படவில்லை.

அச்சிடப்பட்ட மொடியூலின் அனைத்துப் பிரதிகளும் தற்போது முத்திரையிடப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான விசாரணைகள் இடம்பெறுகின்றன.” – என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

தரம் ஆறு மாணவர்களுக்கான ஆங்கிலப் பாடத்திட்டத்தில், வயது வந்தோருக்கான இணையத்தளம் ஒன்றின் முகவரி அச்சிடப்பட்டிருந்த விவகாரம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இதனை அடிப்படையாகக்கொண்டு கல்வி அமைச்சுப் பதவியை வகிக்கும் பிரதமருக்கு எதிராக எதிரணிகள் நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைக்கவுள்ளன.

எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பம் திரட்டப்பட்ட நிலையில், இன்று பிரேரணை சபாநாயகரிடம் கையளிக்கப்படவுள்ளது.

இந்நிலையில் மேற்படி நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் பிரதமரிடம் ஊடகங்களால் வினவப்பட்டது.

இதற்குப் பதிலளித்த அவர், ”நம்பிக்கையில்லாப் பிரேரணை படுதோல்வியடைவது உறுதி. எனினும், இதன்மூலம் கல்வி பற்றி கதைப்பதற்கு வாய்ப்பு கிட்டும்.” – என்றும் அவர் கூறினார்.













# உடுதும்பர பகுதியில் இலேசான அதிர்வு



உடுதும்பர பகுதியில் நேற்று மாலை 5.05 க்கு லேசான அதிர்வு பதிவாகியுள்ளது. 2.2 மெக்னிடியூட் அளவில் இந்த அதிர்வு ஏற்பட்டுள்ளது.

மண்டுல்ல, கலாவலை, மஹாவலை, உடபிடவல, தெமண்டியா, பப்புகந்த ஆகிய பகுதிகளில் மக்கள் இந்த நிலநடுக்கத்தை உணர்ந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது. எனினும் இந்த அதிர்வு குறித்த மக்கள் அச்சமடைய தேவையில்லை என புவியியல் ஆய்வு மற்றும் சுரங்க பணியகம் தெரிவித்துள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேற்படி பதவியில் இருந்து விலகுவதன் மூலம் தங்களுக்கும் கட்சிக்கும் ஏற்படும் சங்கடங்களை தவிர்த்துக் கொள்ளுங்கள்" – என்று கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அடுத்த ஒரு வாரத்துக்குள் நடவடிக்கை எடுத்து கட்சிக்கு அறிவுக்குமாறு கட்சியின் பொதுச் செயலாளர் சிறிதரன் எம்.பியை வேண்டியுள்ளார்.

இந்தக் கடிதம் தொடர்பில் சிறிதரன் என்ன நடவடிக்கை எடுப்பார் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

* * *

கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் முன்னாள் அமைச்சர் டக்லஸ் தேவானந்தா இன்று மீண்டும் கம்பஹா நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட இருக்கிறார்.

இன்றைய தினம் பாதுகாப்பு மற்றும் மருத்துவ விவகாரங்களை காரணம் காட்டி டக்ளஸ் தேவானந்தாவை பிணையில் விடுவிக்குமாறு அவரது சட்டத்தரணிகள் விரிவான விவாதத்தை மன்றில் சமர்ப்பணம் செய்வார்கள் எனத் தெரிகிறது.

எது, எப்படியாயினும் டக்லஸ் தேவானந்தாவுக்கு எதிராக தற்போது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளின் கீழ் அவருக்கு நீதிவான் நீதிமன்றில் பிணை அனுமதி கிடைப்பது பெரும்பாலும் சாத்தியமற்றது என்கின்றன சட்ட வட்டாரங்கள்.

நீதிவான் நீதிமன்றத்தில் முதல் கட்டமாக பிணை கோரிக்கையை முன்வைத்து பார்த்த பின்னரே, அடுத்த கட்டமாக மேல் நீதிமன்றத்தில் டக்லஸ் தேவானந்தாவை விடுவிப்பதற்கான பிணை மனு தாக்கல் செய்யப்படும் எனத் தெரிகிறது.

* * *

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா. சாணாக்கியன் மற்றும் மருத்துவர் சத்தியலிங்கம் ஆகியோரைத் தவிரேனைய 6 எம்பிக்களும் செவ்வாய் முன்னிரவு முதல் புதன்கிழமை விடி காலை 1:30 வரை நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் வீட்டில் நீண்ட நேரம் மந்திராலோசனை செய்தார்கள் என்று நேற்று என் பத்தியில் குறிப்பிட்டிருந்தேன். அத்தகைய கூட்டம் எதிலும் தாம் அன்றையதினம் பங்கு பற்றவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் நேற்றுத் தொடர்பு கொண்டு தெரிவித்தார். அவரின் இந்த விளக்கம் வாசகர்களுக்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது.

## அரசியல் தீர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசு, தமிழ் மக்களின் நீண்ட கால அரசியல் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு வழங்கும் என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்திருந்தார். தமிழ் மக்களை இந்த அரசு ஒருபோதும் ஏமாற்றாது என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இது தொடர்பில் 'முரசு'க்கு நேற்று வழங்கிய செவ்வியின்போதே முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இந்த அரசு இன்று வரை தமிழ் மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றவில்லை. முக்கியமான சில உறுதிமொழிகளாகக் கருதப்படும் காணி விடுவிப்பு, பயங்கரவாதத் தடைச் சட்டம் முழுமையாக நீக்கம், தேசிய இனப்பிரச்சினைக்கு உரிய தீர்வு ஆகிய உறுதிமொழிகள் இன்னமும் நிறைவேற்றப்படாமல் உள்ளன.

ஜனாதிபதி என்பவர் முப்படைகளின் தளபதி. அவரால் மிக விரைவாகக் காணிகளை விடுவிக்க முடியும். ஆனால், அவர் ஆட்சிக்கு வந்து ஒரு வருடம் நிறைவடைந்துள்ள நிலையில் வடக்கு, கிழக்கில் எவ்வளவு காணிகளை விடுவித்துள்ளார்? யாழ்ப்பாணத்தில் விரல் விட்டுச் சொல்லக்கூடிய அளவுக்கு காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளனா? இல்லை.

ஆகவே, அவர்கள் செய்யக்கூடிய விடயங்கள் என்று சொல்லப்படுபவை கூட இன்னும் செய்யப்படவில்லை.

இவ்வாறான நிலையில், தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு காணப்படும் என்று வெளிவிவகார அமைச்சர் இப்போது கூறுவதை எப்படி நம்புவது?

தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் கடந்த ஒரு வருட காலத்தில் அவர்கள் எந்த விளக்கத்தையும் கொடுக்கவில்லை.

13 ஆவது திருத்தச் சட்டம் இல்லாமல் செய்யப்படும் என்று அவர்கள் கூறினார்கள். அப்படியாயின் அந்த இடத்துக்கு என்ன வரப்போகின்றது? என்னத்தைக் கொண்டு அதை மாற்றீடு செய்யப்போகின்றார்கள்? அந்த இடத்தில் வரப்போவது சமஷ்டியா? அல்லது வேறுவிதமான அதிகாரப் பகிர்வா? அதை எவ்வாறு செய்யப்போகின்றார்கள்?

அவர்களது கட்சியில் இருக்கக்கூடிய செயலாளர் ரில்வின் சில்வாவோ அல்லது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவோ கூட தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு என்ன என்பது பற்றி இது வரை வாய் திறந்து பேசவில்லை.

இவர்களும் ஏனைய அரசுகளைப் போல் தமிழ் மக்களை ஏமாற்றிக்கொண்டிருக்கின்றார்கள் என்பதுதான் உண்மை. ஆகவே, அவற்றை அவர்கள் மாற்ற வேண்டுமெனில் பல விடயங்களை அவர்கள் செய்ய வேண்டும்." – என்றார்.

**'முரசு'க்கு சுரேஷ் பிரேமச்சந்திரன் வழங்கிய முழுமையான செவ்வியை காணொளியில் பார்வையிட முடியும்.**




## பிரேரணை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்று அமைச்சர் கே.டி. லால் காந்த தெரிவித்தார்.


எதிரணிகள் அரசியல் நோக்கத்துடன் இந்தப் பிரேரணையை முன்வைக்கப்பவுள்ளன என்றும் அவர் கூறினார்.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை நாடாளுமன்றத்தில் தோற்கடிக்கப்படும் என்றும் அவர் உறுதியாகத் தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தி அரசுக்கு நாடாளுமன்றத்தில் போதிய பெரும்பான்மை இருப்பதால் எதிரணிகளின் முயற்சி வெற்றி பெறாது என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

கல்வி அமைச்சராக ஹரிணி அமரசூரிய மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் நாட்டின் கல்வி முறைமைக்கு சாதகமாக இருக்கின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

எனவே, எதிரணிகளின் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை மக்களைத் தவறாக வழிநடத்தும் அரசியல் நாடகம் என்றும் அமைச்சர் லால் காந்த கடுமையாக விமர்சித்தார்.



# அதிதீவிர மழைவீழ்ச்சி கிடைத்தால் மீண்டும் வெள்ள நிலைமை நேரும்!

(உடப்பு க.மகாதேவன்)

இலங்கைக்குத் தென்கிழக்காக வங்காள விரிகுடா கடற்பரப்பில் நிலை கொண்டுள்ள தாழமுக்கம் காரண மாக, நாட்டிற்கு அதி தீவிர மழைவீழ்ச்சி கிடைக்குமாயின் நீர்நிலைகளின் சடுதி யாக நீர்மட்டம் அதிகரிக்கக்கூடும் என நீர்ப்பாசனத் திணைக்களம் தெரி விக்கிறது.

நேற்றுக் காலை நிலவிய வானிலை குறித்துத் தெளிவுபடுத்தும் விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட நீர்ப் பாசனத் திணைக்களத்தின் பொறியி யலாளர் எல்.எஸ். சூரியபண்டார, தற் போதைய வானிலை முன்னறிவிப்பு களுக்கு அமையச் சில மாவட்டங் களில் வெள்ளப்பெருக்கு அபாயம் ஏற்பட இடமுண்டு என்று தெரிவித்தார்.

விசேடமாக அம்பாறை, மட்டக் களப்பு, அனுராதபுரம், பொலன்னறுவை, திருகோணமலை மற்றும் வடக்குப் பிர தேசங்களில் தீவிர மழைவீழ்ச்சி பதி வானால், பிரதான ஆறுகள் இல்லா விடினும் எதிர்காலத்தில் வெள்ள நிலைமை ஒன்று ஏற்படுவதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளன எனவும், மக்கள் அது குறித்து அவதானமாக இருக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், தற்போது அநேக மான குளங்களில் அபாய மட்டத்திற் கும் கீழேயே நீர்மட்டம் காணப்படுவ தாகக் கூறிய அவர், நீர்ப்பாசனக் கணிப் பீடுகளின்படி ஒட்டுமொத்த குளங்களின் நீர் கொள்ளளவில் 80 வீதம் முதல் 90 வீதத்திற்கு இடைப்பட்ட அளவே காணப்படுவதாகவும் குறிப்பிட்டார்.


தற்போதைய நிலையில் விசேடமாகக் கிழக்கு, வடக்கு, வடமத்திய, மத்திய, தெற்கு மற்றும் ஊவா மாகாணங்களை உள்ளடக்கிய குளங்களில் வான் பாயும் நிலை காணப்படுவதாகவும், 73 பிரதான குளங்களில் 25 குளங்களும், நடுத்தர அளவிலான 24 குளங்களும் தற்போது வான் பாய்ந்து கொண்டிருக்கின்றன எனவும் பொறியியலாளர் எல்.எஸ். சூரியபண்டார தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

நேற்று முன்தினமும் நேற்றும் வான் கதவுகள் திறக்கப்பட்டு குளங்களில் குறிப்பிடத்தக்க இடவசதி பேணப்பட்டு வருகின்ற போதிலும், தீவிர மழைவீழ்ச்சி ஏற்பட்டால் மேலும் வான் கதவுகளைத் திறக்க நேரிடும்.

இதேவேளை, 6 மகாவலி நீர்த்தேக் கங்கள் தற்போது வான் பாய்ந்து கொண் டிருக்கின்றன. லொக்கலஓயா, ஹேபொல, மாதுருஓயா, கந்தலயம, கலாஓயா மற்றும் களுகங்கை என்பன அவற்றில் அடங்குகின்றன. – என்றார்.

மகாவலி அதிகாரசபைக்குச் சொந்த மான நீர்த்தேக்கங்களில் சுமார் 95 வீத நீர் கொள்ளளவு காணப்படுகின்ற போதிலும், கொத்மலை நீர்த்தேக்கத் தின் நீர் கொள்ளளவு 59 வீதமாகக் காணப்படுவதாக மகாவலி நீர் முகாமைத் துவப் பணிப்பாளர் நிலந்த தனபால தெரிவித்தார்.



# கட்டைக்காட்டில் கடற்படையின் தளத்தை நெருங்கி இந்திய மீனவரின் இழுவைமடிப் படகுகள் அட்டகாசம்

(மரியசீலன் திலைக்ஸ்)

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டு கடற்பரப்பில் இந்திய இழுவைமடிப் மீன்பிடிப் படகுகள் அத்து மீறி மீன்பிடியில் ஈடுபட்டுவருகின் றன என்று கூறப்படுகின்றது.

வடமராட்சி கிழக்கு கடற்பகுதியில் சீரற்ற காலநிலையால் கடல் கொந்த ளிப்பாகக் காணப்படுகிறது. இதன் காரணமாக வடக்கு மீனவர்கள் யாரும் கடலுக்குச் செல்லவில்லை.

இதைச் சாதகமாகப் பயன்படுத் திய இந்திய இழுவைமடி மீனவர்கள் கட்டைக்காட்டு கடற்பரப்பிற்கு ஒரு கிலோ மீட்டர் கரைக்கு அண்ணளவாக வருகை தந்து இழுவை மடி தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள்.

இலங்கை மீனவர்களுக்குச் சொந்த மான கடல் வளத்தை அவர்கள் பார்த் திருக்கக் கண் முன்னால் சட்டவிரோத முறையில் அழித்துச் செல்கிறார்கள் எனக் கூறப்படுகின்றது.

வெற்றிலைக்கேணி பகுதியில் இலங் கைக் கடற்படையின் மிகப்பெரிய கடற் படை தளம் அமைந்திருக்கின்ற போதி லும் கடற்படை தளத்திற்கு அண்மை யாக வந்து இந்திய இழுவைமடி படகு கள் எந்தவித பயமுமின்றி தொழில் செய்து வருகிறார்கள்.

வடமராட்சி மீனவர்களின் வாழ்வா தாரத்தை இந்திய இழுவை மடி மீனவர்கள் அழித்துச் செல்வதை தடுப்பதற்கு இது வரை எந்தவித நிரந்தர முயற்சிக ளையும் உரியவர்கள் எடுக்கவில்லை யென மீனவர்கள் கவலை தெரிவிக் கின்றனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்


259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## இழுபடும் பதவி நிலை

கடந்த பத்து மாதங்களுக்கு மேலாக நாட்டுக்கு ஒரு கணக்காய்வாளர் நாயகம் இல்லை.

அந்தப் பதவிக்கு பொருத்தமானவரைத் தெரிவு செய்து நியமிக்கும் விடயத்தில் ஜனாதிபதிக்கும் அரசமைப்புக் கவுன்ஸிலுக்கும் இடையில் முரண்பாடு நீடிக்கிறது.

மிக முக்கியமான காலகட்டத்தில் நாட்டுக்கு அதன் நிதி நிர்வாகங்களுக்கு பொறுப்பான கணக்காய்வாளர் நாயகம் இல்லை என்பது பெரும் பின்னடைவாகும்.

நாட்டின் நிதி விடயங்களைக் கையாளும் அதிகாரம் நாடாளுமன்றுக்கு உரியது. அந்த அதிகாரத்தை நாடாளுமன்றம் பிரயோகிப்பதற்கு கணக்காய்வாளர் நாயகம் பதவி மிக முக்கியமானது.

பொருளாதார நெருக்கடியில் சிக்கித் துவண்டு கிடக்கும் நாடு அதிலிருந்து மீண்டெழுவதற்கு சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி போன்ற தரப்புகளின் உதவியை நாடி நிற்கின்றது. இவ்விடயத்தில் இலங்கைக்கு அந்த அமைப்புக்கள் உதவ முன்வந்தாலும், பொருளாதார நடவடிக்கைகள், நிதி நிர்வாகம் போன்ற விவகாரங்கள் ஒழுங்கு முறையாக இடம் பெற வேண்டும் என்று அவை கட்டுப்பாடுகள் விதித்துள்ளன என்பது தெரிந்த விடயம்தான். இந்தக் கட்டுப்பாடுகளுக்கு அமைய நிதி நிர்வாகம் ஒழுங்காக நடைபெறுகின்றதா என்பதை உறுதிப்படுத்த வேண்டியவர் கணக்காய்வாளர் நாயகம்தான்.

அத்தகைய பதவி நிரப்பப்படாத நிலையில், நாட்டின் நிதி நிர்வாகம் தொடர்பில் இந்த சர்வதேச அமைப்புக்கள் திருப்தி கொள்ள முடியுமா என்ற கேள்வி எழுகின்றது.

அதேசமயம் அண்மைக்காலத்தில் ஏற்பட்ட பேரிடரால் நாடு பெரும் இழப்புக்களைச் சந்தித்து அந்தரிக்கின்றது. இந்தச் சமயத்தில் வெளிநாட்டு உதவிகளை பெற்றே நாடு நிமிர வேண்டி இருக்கின்றது.

பேரிடர் நிவாரண கொடுப்பனவுகள், மீள் கட்டமைப்புக்கள், புனர்நிர்மாணம் போன்ற பணிகளை எல்லாம் முன்னெடுப்பதில் கணக்காய்வாளர் நாயகத்தின் பங்கு மிக மிக முக்கியமானதாகும்.

ஆனால், இத்தகைய பதவி வெற்றிடம் குறித்து ஜனாதிபதி சிரத்தை கொள்பவராகவோ அலட்டிக் கொள்பவராகவோ தெரியவில்லை. அந்தப் பதவிக்கு ஒருவரை நியமிக்கும் விவகாரம் கிணற்றில் போட்ட கல்லாக அமுங்கிப் போய்க் கிடக்கின்றது.

இதுவரையில் இந்தப் பதவிக்கு ஜனாதிபதி பரிந்துரைத்த பெயர்கள் பொருத்தமற்றவை என்று அரசமைப்பு கவுன்ஸில் முடிவு செய்து கொண்ட நிலையில் மாற்றுப் பெயர்களை உடனடியாக பரிசீலனைக்கு சமர்ப்பிக்க வேண்டியது ஜனாதிபதியின் கடமையாகும். ஆனால் அந்தக் கடமையை ஜனாதிபதி நிறைவு செய்பவராக தெரியவில்லை. புதிய கணக்காய்வாளர் நாயகம் நியமிக்கப்படும் விவகாரத்தை கண்மூடித்தனமாக இழுபடவிட்டு அவர் பார்த்திருக்கிறார்.

கடைசியில் நீண்ட காலமாக நிலுவையில் உள்ள கணக்காய்வாளர் நாயகம் பதவிக்கு உரியவரை நியமிக்கத் தவறியமை தொடர்பில், சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியிடம் முறைப்பாடு செய்ய எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளன என நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்திருக்கின்றார்.

# மட்டக்களப்பில் லசந்த நினைவேந்தல்














**(வாலகிருஸ்ணா)**

படுகொலை செய்யப்பட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க வின் 17ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று மாலை மட்டு. ஊடக அமையத்தில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் மற்றும் மட்டு ஊடக அமையம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

மட்டு. ஊடக அமையம் மற்றும் மட்டக் களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் வா.கிருஸ்ண குமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மட்டக்களப்பு – அம்பாறை மாவட் டங்களிலிருந்து ஊடகவியலாளர்கள் கலந்துகொண்டனர்.

இதன்போது உயிரிழந்த ஊடகவிய லாளர் லஸந்த விக்கிரமதுங்கவின் உருவப்படத்துக்கு மலர்மாலை அணி விக்கப்பட்டு ஈகச்சுடர் ஏற்றப்பட்டு மலரஞ் சலி செலுத்தப்பட்டதுடன் ஒரு நிமிட மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

அதனை தொடர்ந்து சிரேஷ்ட ஊடக வியலாளர்களினால் லசந்தவிக்ரமதுங்க பற்றிய நினைவுரைகள் இடம்பெற்றன.

சிரேஷ்ட ஊடகவியலாளரான லசந்த விக்கிரமதுங்க, “சண்டே லீடர்“ பத்திரிகை யின் தலைமை ஆசிரியராகப் பணியாற் றிய காலத்தில், 2009 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி, இனந்தெரியாத குழுவினரால் படுகொலை செய்யப்பட்டார்.

குற்றவாளி சமூகத்தில் எந்த நிலையில் இருந்தாலும், அதனைப் பொருட்படுத் தாமல் தனது பத்திரிகையின் மூலம் தைரியமாக உண்மைகளை வெளிப் படுத்திய ஊடகவியலாளராக லசந்த விக்கிரமதுங்க விளங்கினார்.

இவரின் ஊடக சேவையை கௌரவிக் கும் வகையில், ஊடக சுதந்திரத்திற்கான யுனெஸ்கோவின் குயிலமோ கேனோ விருது, நேஷனல் பிரஸ் கிளப் – பிரஸ் ஃப்ரீடம் விருது ஆகிய விருதுகள் வழங்கப் பட்டன. மேலும், இவர் கொல்லப்பட்ட பின்னரும் International Press Institute – World Press Freedom Heroes விருது வழங்கப்பட்டு சர்வதேச ரீதியாக கௌர விக்கப்பட்டார்.

இவரது கொலையுடன் தொடர்புடைய பல சந்தேகநபர்கள் சட்டத்தின் முன் நிறுத் தப்பட்டிருந்த போதிலும், இதுவரை இந்தக் கொலைக்குறித்த நீதி கிடைக்கப்பெற வில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் ஊடக வியலாளர்கள், அரசியல் பிரதிநிதிகள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்ட னர்.

# சாணக்கியனின் கோரிக்கைக்கு அமைய மட்டக்களப்புக்கு மீண்டும் விமான சேவை









இரத்மலானையிலிருந்து மட்டக்களப்பிற்கான உள்நாட்டு விமான சேவையை மீண்டும் ஆரம்பிக்குமாறு மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் முன்வைத்த வேண்டுகோளை ஏற்று, மட்டக்களப்பு உள்நாட்டு விமான சேவையை திரும்பவும் ஆரம்பிக்க ஜனாதிபதி இணங்கியுள்ளார்.

சாணக்கியன் இராசமாணிக்கம் எம்.பியே இத்தகவலைத் தெரிவித்தார்.

நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று முன்தினம் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற பாதுகாப்பு மற்றும் நிதி அமைச்சுகளின் ஆலோசனைக் கூட்டத்தின் போதே இந்த இணக்கம் தெரிவிக்கப்பட்டதாக அவர் கூறினார்.

அதேவேளை, பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனைக் கூட்டத்தின் போது அண்மையில் பாலையடிவட்டை கிராமத்திற்கு கள விஜயம் மேற்கொண்ட போது, அங்குள்ள இராணுவ முகாமை அகற்ற வேண்டும் என்ற மக்களின் நீண்டநாள் கோரிக்கையை முன்னிட்டு, தொடர்ச்சியாக மேற்கொண்ட முயற்சிகளின் பயனாக 12 பேர்ச் காணியை விடுவிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

எனினும், இது போதுமானதல்ல என சுட்டிக்காட்டியமையை அடுத்து, முழுக் காணியையும் விடுவிப்பதற்கான ஆய்வை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார் என சாணக்கியன் கூறினார்.

மேலும், பட்டிருப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட குருக்கள்மடம் கலைவாணி மகா வித்தியாலயத்தின் காணியிலும் இராணுவ முகாம் அமைந்துள்ள நிலையில், அதன் ஒரு பகுதி இதுவரை விடுவிக்கப்படாதுள்ளதாக தாம் அங்கு தெரிவித்தார் என்றும், அந்தப் பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு, அந்தக் காணியை விடுவிக்க முடியுமா என்பது தொடர்பில் மீளாய்வு செய்யுமாறும் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை வழங்கியுள்ளார் எனவும் சாணக்கியன் குறிப்பிட்டார்.

அத்துடன், மண்முனை தென்மேற்கு பட்டிப்பளை பிரதேச செயலகத்திற்குட்பட்ட கெவுளியாமடு பகுதியில் வன பரிபாலனத் திணைக்களத்திற்கு சொந்தமான காணிகளை சட்டவிரோதமாக ஆக்கிரமித்து இருப்பவர்களுக்கு காணி வழங்குமாறு கோரப்பட்டுள்ளமை தொடர்பிலும் மீளாய்வு செய்யுமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார் என்றும் –

மட்டக்களப்பு விமான நிலைய வீதியை மண்முனை வடக்கு பிரதேச செயலகம் மற்றும் மாநகர சபைக்கு விடுவிப்பதற்கான அனுமதியை வழங்கும் அறிவித்தலை மட்டக்களப்பு விமானப்படையினருக்கு வழங்குமாறும் ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார் என்றும் – சாணக்கியன் குறிப்பிட்டார்.

மேலும், மட்டக்களப்பு மாவட்டத்தில் மழை மற்றும் வெள்ள காலங்களில் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட கோடமேடு கிராமம், போரதீவுப்பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட வேத்துச்சேனை கிராமம், கோறளைப்பற்று தெற்கு – கிரான் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பிரம்படித்தீவு மற்றும் மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட பண்டாரியாவெளி ஆகிய கிராமங்கள் வெள்ள நீரால் சூழப்பட்டு, வீடுகள் நீரில் மூழ்குவதால் மக்கள் இடம்பெயர்ந்து இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்படுகின்றனர் எனத் தாம் அங்கு சுட்டிக்காட்டினார் என சாணக்கியன் சொன்னார்.

இந்த கிராமங்களில் உயரமான மாடிக் கட்டடங்கள் இல்லாதமையே இந் நிலைக்குக் காரணம் எனக் குறிப்பிட்ட அவர், அவ்வாறான கட்டடங்களை நிர்மாணிப்பதற்கான நிதி ஒதுக்கீடுகளை செய்யுமாறு அதிகாரிகளிடம் ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார் எனத் தெரிவித்தார்.

அண்மையில் தித்வா புயலால் பயிர் செய்கை பாதிக்கப்பட்ட காயான்கேணி விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க முடியாது என தெரிவிக்கப்பட்டதாக மக்கள் முறையிட்டிருந்த நிலையில், அந்த இழப்பீட்டை வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார் என்றார் சாணக்கியன்.

மேலும், போரதீவுப்பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட ஆனைகட்டியவெளி கிராமத்தில் உள்ள சமுளயடிவட்டை வீதி 2024 ஆம் ஆண்டு வெள்ளத்தில் பாதிக்கப்பட்டு இதுவரை புனரமைக்கப்படவில்லை எனக் கூட்டத்தின் போது தாம் எடுத்துரைத்தார் என்றும்,

அந்த வீதியையும், ஓட்டமாவடி பிரதேச சபைக்குட்பட்ட வெலிக்கந்தை ஊடாக வடமுனைக்கு செல்லும் பாதையையும் புனரமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார் என்றும் – அவர் கூறினார்.

இதனுடன், ஈஸ்டர் தாக்குதலுக்கு பின்னர் மட்டக்களப்பு விமான நிலையத்தில் விமான சேவைகள் நிறுத்தப்பட்டுள்ள நிலையில், தற்போது அந்த சேவையை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பில், எத்தனை விமான போக்குவரத்துகள் இடம்பெற்றால் மக்களுக்கு பயனளிக்கும் என்பதனை மீளாய்வு செய்து அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறும் ஜனாதிபதி தம்மிடம் கேட்டுக் கொண்டார் என சாணக்கியன் இராசமாணிக்கம் தெரிவித்தார்.

இந்த அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் அடுத்த பாதுகாப்பு அமைச்சு ஆலோசனைக் கூட்டத்திற்கு முன்னர் அறிக்கை சமர்ப்பிக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை வழங்கியுள்ளார் எனவும் அவர் தெரிவித்தார்.

# மட்டு. கிரான் பாலத்தின் மேல் வெள்ள நீர் பாய்ந்து வருவதால் கிரான் - புலிபாய்ந்தகல் இடையே போக்குவரத்துத் துண்டிப்பு







(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பில் சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட கடும் மழையினால் கிரானுக்கும் புலிபாய்ந்தகல் பிரதேசத்தை இணைக்கும் கிரான் பாலத்துக்கு மேலால் 4 அடி உயரத்துக்கு வெள்ள நீர் பாய்ந்து செல்வதால் புலிபாய்ந்தகல் பிரதேசத்துக்கும் கிரானுக்கும் இடையிலான வீதி போக்குவரத்து துண்டிக்கப்பட்டதுடன் படகுச் சேவை ஆரம்பிக்கப்பட்டு இடம்பெற்று வருகின்றது.

பல குளங்கன் வெள்ளத்தினால் நிரம்பியமையை அடுத்து குளங்களின் வான் கவுகள் அந்தந்த நீர் மட்ட அளவுகளுக்கு ஏற்ப திறந்து விடப்பட்டுள்ளன.

தாழ் அமுக்கத்தால் நேற்று முன்தினம் இரவ. முதலே மழை பெய்ய ஆரம்பித்துள்ளது. பலத்த காற்றுன் வீசி வருகிறது. கடல் கொந்தளித்துக் காணப்படுகின்றது. மாவட்டத்தில் உள்ள பிரதான குளங்களான உன்னிச்சை, நவகிரி, தும்பங்கேணி, றூகம், கட்டுமுறிவு, வாகனேரி, வெலிகந்தை, வடமுனை, புனானை, மாவடி ஓடை போன்றவற்றின் நீர்மட்டம் உயர்ந்துள்ளது.

இதனையடுத்து உன்னிச்சை குளத்தின் இரு வான் கதவுகள் 3 அடிக்கும் ஒரு வான்கதவு 4 அடிக்கும் திறந்து விடப்பட்டுள்ளது. அதேவேளை ஏனைய குளங்களின் வான் கதவுகள் அந்தந்த குளத்தின் நீர் மட்டத்துக்கு அமைவாக திறந்து விடப்பட்டுள்ளன.

இதனையடுத்து தாழ் நிலப்பகுதிகள் மற்றும் நெல் வயல்கள் வெள்ளநீரில் மூழ்கிவருகின்றன. கிரானையும் புலிபாந்தகல் பிரதேசத்தையும் இணைக்கும் கிரான் பாலத்தின் ஊடாக வெள்ள நீர் 4 அடி உயரத்திற்கு பாய்ந்து வருவதால் அந்த பகுதிகளுக்கான வீதிப் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.

வவுணதீவு - மட்டக்களப்பை இணைக்கும் வலையிறவு பாலத்தில் நீர் மட்டம் அதிகரித்து வரும் நிலையில் இந்த பகுதிகளுக்கு இடையிலான போக்குவரத்தும் துண்டிக்கப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை குளங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டதை அடுத்து அதனை அண்டிய பகுதி மக்கள் கவனமாக செயற்படுமாறு இடர் அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது.



# திருமலை வீரநகர் மீனவக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கக் கோரிக்கை






(ஏ.எச்.ஹஸ்பர்)

திருகோணமலை வீரநகர் கரையோர பகுதியில் அதிக காற்று மற்றும் கடல் அலையின் சீற்றம் காரணமாக கரையோர பகுதியில் உள்ள மீனவர்களின் குடியிருப்பு பகுதி தாழ் இறங்கியுள்ளதால் தாங்கள் வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கின்றனர் எனவும் அப்பகுதி கரையோர மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

அந்தக் கரையோரப் பகுதியில் ஏற்கனவே நான்கு வீடுகள் கடல் சீற்றம் காரணமாகத் தாழ் இறங்கிச் சேதமாக்கப்பட்ட நிலையில் ஒரு பகுதிக்கு மாத்திரம் கடல் அரிப்பை தடுக்க கருங்கல் இடும் நடவடிக்கை இடம் பெறுகிறது. ஆனால் இந்தக் கரையோரம் 500 மீற்றருக்கும் மேலான தூரத்தை கொண்டுள்ளது. இதனால் முழுமையாகக் கடல் அரிப்பை தடுத்து தங்களின் குடியிருப்புக்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறு மீனவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இது குறித்து அப்பகுதி மீனவர்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தற்போது வரைக்கும் எங்களுக்கு அரசாங்கம் ஊடாக எவ்வித உதவியும் கிடைக்கவில்லை. திட்வா புயல் காரணமாக பாதிக்கப்பட்ட நிலையில் கடல் தொழிலுக்கு இன்னும் இரு மாத காவமாக செல்லவில்லை. கடலை நம்பியே வாழ்கிறோம். எமது மனைவி, பிள்ளைகள் எங்களை நம்பியே உள்ளனர். நாங்கள் நகரப் பகுதி மையத்தில் உள்ளோம். எமது பகுதி ஊடான கடல் அரிப்பை தடுக்க யாரும் நடவடிக்கை எடுக்கவோ பார்க்கவோ இல்லை. எமது வீடுகள் மற்றும் கோயில் எல்லாம் இந்த கடல் அரிப்பால் இல்லாமல் போகும் நிலை ஏற்பட்டுள்ளது.எமது பிள்ளைகள் வெளியில் இறங்கி நடமாட முடியாதளவுக்கு கடலின் தாக்கம் சூழ்ந்துள்ளது. மீண்டும் ஓர் அபாய நிலையை எதிர்நோக்கியுள்ளோம். நாங்களும் இந்த நாட்டு பிரஜை என்ற வகையில் எமக்கு உதவி செய்ய யாரும் முன் வரவுமில்லை .

எனவே எங்களையும் எங்கள் வாழ்வாதாரத்தையும் பாதுகாக்கவும் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். – என்றனர்.

# அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்திக்கு மட்டு. மாநகரசபை நன்றி தெரிவிப்பு




(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு மாநகர சபைக்கு வருமானம் ஈட்டித் தருவதற்கான போக்குவரத்துச் சேவை ஒன்றின் அனுமதியைப் பெற்று வழங்கிய மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவரும் அமைச்சருமான சுனில் ஹிந்துன்நெத்திக்கு நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற மாநகர சபை அமர்வில் முதல்வர் மற்றும் சபை உறுப்பினர்கள் நன்றி தெரிவித்தனர்.

மாநகரசபையின் 8 ஆவது சபையின் 11 அமர்வு நேற்று வியாழக்கிழமை மாநகரசபை முதல்வர் சிவப்பாக்கியநாதன் தலைமையில் காலை 9.30 மணிக்கு சபா மண்டபத்தில் இடம் பெற்றது.

மாவட்ட அபிவிருத்தி குழு தலைவரும் அமைச்சருமான சனில் ஹந்தி நெத்தியிடம் மட்டு. மாநகர சபையால் மட்டக்களப்பு – கொழும்பு இடையிலான பஸ் சேவை ஒன்றை நடத்துவதற்கான போக்குவரத்து அனுமதியை பெற்றுத் தருமாறு கடந்த பிரதேச அபிவிருத்தி குழு கூட்டத்தில் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்திருந்தோம் என்பதை மாநகர சபை முதல்வர் விசேடமாக சபைக்கு நேற்று அறித்தார்

இதற்கமைய அமைச்சர் அந்த பஸ் போக்குவரத்துச் சேவைக்கான அனுமதியைப் பெற்றுக் கொடுத்து அதன் அனுமதியை அனுப்பியுள்ளார். எனவே அவருக்கு நன்றிகள் என மாநகர சபை முதல்வர் தெரிவித்ததையடுத்து உறுப்பினர்களும் ஒரு மனதாக அவருக்கு நன்றிகள் தெரிவித்தனர்.




# இலங்கைக்கு 10 ஹெலிக்கொப்டர்களை இலவசமாக வழங்குகிறது அமெரிக்கா

இலங்கை விமானப்படைக்கு பத்து TH-57 (Bell 206 Sea Ranger) ரக ஹெலிக்கொப்டர்களை அமெரிக்கா இலவசமாக வழங்கவுள்ளதாக தனது பதவிக்காலம் நிறைவடைந்து செல்லவுள்ள இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

இந்த ஹெலிக்கொப்டர்களுக்காக அமெரிக்கா எந்தக் கட்டணத்தையும் வசூலிக்காது. “மேலதிக பாதுகாப்பு தளபாடங்கள் திட்டத்தின்“ (Excess Defense Articles Program - EDA) கீழ் இவை இலங்கைக்கு மாற்றப்படுகின்றன.

டெக்சாஸில் தயாரிக்கப்பட்ட, நம்பகத்தன்மை வாய்ந்த இந்த ஹெலிக்கொப்டர்கள் 2026 ஆம் ஆண்டின் முற்பகுதியில் இலங்கையை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

டித்வா சூறாவளி போன்ற இயற்கை அனர்த்தங்களின் போது தேடல் மற்றும் மீட்புப் பணிகளில் ஹெலிக்கொப்டர்கள் வகிக்கும் முக்கிய பங்கை தூதுவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த 10 ஹெலிக்கொப்டர்களும் விமானப்படையின் திறனை அதிகரிப்பதோடு, விமானிகளுக்கான பயிற்சிகளையும் மேம்படுத்த உதவும்.

இதன் மூலம் அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகளை மேலும் வினைத்திறனாக முன்னெடுக்க இலங்கை விமானப்படைக்கு வாய்ப்பு ஏற்படும்.

தூதுவர் ஜூலி சங் தனது எக்ஸ் தளத்தில், “இலங்கை விமானப்படைக்கு இந்த 10 ஹெலிக்கொப்டர்களை வழங்குவதில் அமெரிக்கா பெருமகிழ்ச்சி அடைகிறது” எனப் பதிவிட்டுள்ளார்.

# பிரதமருக்கு எதிரான பிரேரணைக்கு முன்னுரிமை வழங்க அரசு தயார்

## பிமல் ரத்நாயக்க தெரிவிப்பு

கல்வி அமைச்சரான பிரதமர் ஹரிணி அமரசூரியவுக்கு எதிராக எதிர்க்கட்சியினரால் கொண்டுவர தீர்மானிக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு, நாடாளுமன்ற நிலையியற் கட்டளைக்கமைய முன்னுரிமை வழங்கப்படும் என்று சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

அடுத்த நாடாளுமன்ற அமர்வு வார நடவடிக்கைகள் தொடர்பில் தீர்மானிப்பதற்காக நாடாளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான குழுக் கூட்டம் இந்த வாரத்தில் நடத்தப்படாமல் இருப்பது தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சி பிரதம கொரடாவான கயந்த கருணாதிலக்கவினால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். பிமல் ரத்நாயக்க மேலும் உரையாற்றுகையில்,

“அரசாங்கத்தின் இரண்டு முக்கிய சட்டமூலங்கள் தொடர்பில் நீதிமன்ற நடவடிக்கைகள் முடிவடைந்தால் அதனை நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்க வேண்டும். இதனாலும் அதேபோன்று நீங்கள் இப்போது நம்பிக்கையில்லா பிரேரணையொன்றுக்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக கூறப்படுகின்றது.



நாடாளுமன்ற நிலையியற் கட்டளைகளின்படி அதற்கும் முன்னுரிமை வழங்க வேண்டியுள்ளது. இதனால் இந்த நேரத்தில் இந்த வாரத்தில் நாடாளுமன்ற அமர்வு நடவடிக்கை தொடர்பான குழுக் கூட்டத்தை நடத்தாமல் இருப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வழமையாக வியாழன் அல்லது வெள்ளிக்கிழமையில் இந்த கூட்டம் நடத்தப்படும். ஆனால் நான் குறிப்பிட்ட காரணங்களால் இந்த வாரத்தில் இந்த கூட்டம் நடத்தப்படாது. எவ்வாறாயினும் அடுத்த அமர்வு வாரத்திற்கான விவாதங்களுக்குத் தயாராவதற்கு உறுப்பினர்களுக்குப் போதிய கால அவகாசம் கிடைக்கும் வகையில், நாடாளுமன்ற நடவடிக்கை தொடர்பான கூட்டம் விரைவில் திட்டமிடப்படும்.”- என்றார்.




# இந்திய - இலங்கை விளையாட்டரங்கை நிர்மாணிக்கும் ஒப்பந்தம் கைச்சாத்து

இராணுவப் போர் கல்லூரியில் நிர்மாணிக்க திட்டமிடப்பட்டுள்ள இந்திய – இலங்கை விளையாட்டரங்கை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இலங்கை இராணுவ தலைமையகத்தின் பல்நோக்கு மண்டபத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இராணுவ தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லசந்த ரோட்ரிகோ மற்றும் இந்திய இராணுவ தளபதி ஜெனரல் உபேந்திர திவேதி ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

இந்திய இராணுவ தளபதி, 20 மஹிந்திரா ஸ்கோர்பியோ வாகனங்கள், பயிற்சி சிமுலேட்டர்கள் மற்றும் 02 அம்பியூலன்ஸ்களை இலங்கை இராணுவத்திடம் உத்தியோகபூர்வமாக வழங்கி வைத்தார்.

இருநாடுகளின் இராணுவ தளபதிகளுக்கும் இடையிலான பரஸ்பர உறவை பிரதிபலிப்பதாக இந்த நடவடிக்கை அமைந்தது.

பின்னர் இந்திய இராணுவ தளபதி பாதுகாப்பு சேவைகள் மற்றும் பணியாளர் கல்லூரியை பார்வையிட்டார்.

இதன்போது கல்லூரி நூலகத்தின் இந்திய – இலங்கை நட்புறவு பிரிவு திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்வின் பொது இந்திய இராணுவ தளபதி கல்லூரியின் பீடாதிபதி மற்றும் பயிற்றுவிப்பாளர்களுடனான சிநேகபூர்வ கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

பாதுகாப்பு சேவைகள் மற்றும் பணியாளர் கல்லூரிக்கு ஒரு அம்பியூலன்ஸ் வாகனமும் அன்பளிப்பு செய்யப்பட்டது.

# சடுதியாக அதிகரிக்கும் டெங்கு பரவல் ஒரு வாரத்தில் 1,500 பேருக்கு பாதிப்பு

இலங்கையை அண்மையில் தாக்கிய "டித்வா" சூறாவளி மற்றும் அதனால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கைத் தொடர்ந்து, நாடு முழுவதும் டெங்கு காய்ச்சல் பரவல் அபாயகரமான நிலையை எட்டியுள்ளது.

2026 ஆம் ஆண்டின் முதல் ஆறு நாட்களில் மட்டும் 1,598 டெங்கு நோயாளிகள் பதிவாகியுள்ளனர்.

இது நாளொன்றுக்கு சராசரியாக 250 இற்கும் மேற்பட்ட பாதிப்புகள் பதிவாகி வருவதைக் காட்டுகிறது.

2024ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் முழுவதிலும் 4,931 நோயாளிகளே பதிவாகியிருந்த நிலையில், இந்த ஆண்டின் தொடக்கத்திலேயே பாதிப்பு எண்ணிக்கை பல மடங்கு அதிகரித்துள்ளதாக சுகாதாரத் தரவுகள் தெரிவிக்கின்றன.

இது குறித்து கருத்து தெரிவித்துள்ள சமூகநல மருத்துவ நிபுணர் பிரஷிலா சமரவீர, சூறாவளியைத் தொடர்ந்து தற்காலிக முகாம்களில் புகை விசிறல் மற்றும் முறையான கழிவு மேலாண்மைப் பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

மேலும், காய்ச்சல் அறிகுறிகள் தென்பட்டால் நோயாளிகள் தாமாகவே மருந்துகளை உட்கொள்வதைத் தவிர்க்க வேண்டும் என்றும், காய்ச்சல் இரண்டு நாட்களுக்கு மேல் நீடித்தால் உடனடியாகத் தகுதிவாய்ந்த மருத்துவரை அணுகி சிகிச்சை பெற வேண்டும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

சிகிச்சையில் ஏற்படும் தாமதம் உயிருக்கு ஆபத்தாக முடியலாம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் தகவல்படி, கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை உள்ளிட்ட மேல் மாகாண மாவட்டங்களிலேயே அதிகப்படியான



பாதிப்புகள் பதிவாகியுள்ளன.

அத்துடன் கண்டி, காலி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மற்றும் இரத்தினபுரி போன்ற மாவட்டங்களிலும் டெங்கு பரவல் தீவிரமடைந்துள்ளது.

குறிப்பாக பாடசாலைகள், அரச நிறுவனங்கள், வழிபாட்டுத் தலங்கள் மற்றும் கைவிடப்பட்ட கட்டிடங்கள் நுளம்பு பெருகும் பிரதான இடங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

இவற்றைச் சுத்தப்படுத்தும் பணிகளில் பொதுமக்களின் ஒத்துழைப்பை சுகாதார அதிகாரிகள் கோரியுள்ளனர்.

# கணக்காய்வாளர் நாயகம் இன்றி அராஜக நிலைக்கு செல்லும் நாடு

## தயாசிறி ஜயசேகர தெரிவிப்பு



நாட்டில் கணக்காய்வாளர் நாயகம் ஒருவரை நியமிக்காமல் அரசாங்கம் காலந்தாழ்த்தி வருவதன் மூலம் நாடு பல துறைகளில் அராஜக நிலையை நோக்கிச் சென்றுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கூட்டு எதிர்க்கட்சியின் ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஒரு வருட காலமாக பதில் கணக்காய்வாளர் நாயகம் ஒருவர் கடமையாற்றி வந்த நிலையில், கடந்த ஒரு மாத காலமாக பதில் அதிகாரி கூட இன்றி கணக்காய்வு திணைக்களம் இயங்கி வருகிறது.

ஒரு நாடு ஒரு மாத காலம் கணக்காய்வாளர் நாயகம் இன்றி இயங்குவது மிகவும் பாரதூரமான நிலைமையாகும். தகுதியுள்ள அதிகாரிகள் இருக்கும் போது, அவர்களின் பெயர்களைப் பரிந்துரைக்க ஜனாதிபதி தயக்கம் காட்டி வருகிறார்.

பதில் கணக்காய்வாளர் நாயகமாக இருந்த தர்மப்பிரிய கம்மன்பில அனைத்து தகுதிகளையும் கொண்டிருந்தும், அவரது பெயரைப் பரிந்துரைக்காமல் தகுதி குறைந்தவர்களின் பெயர்களையே ஜனாதிபதி அனுப்பி வைத்துள்ளார்.

இதன் காரணமாகவே அரசியலமைப்பு பேரவை அந்தப் பெயர்களுக்கு அனுமதி வழங்கவில்லை.

கணக்காய்வாளர் நாயகம் இல்லாததால் நாடாளுமன்றத்தின் பொதுக் கணக்குக் குழு, அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு உள்ளிட்ட பல குழுக்களின் செயற்பாடுகள் மற்றும் நாட்டின் ஒட்டுமொத்த தணிக்கை நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

முறையான அதிகாரியை நியமிக்கத் தவறியமை குறித்து சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி ஆகியவற்றுக்குத் தெரியப்படுத்த எதிர்க்கட்சிகள் இணைந்து நடவடிக்கை எடுக்கவுள்ளன.

நாட்டின் நிதி ஒழுக்கத்தைப் பேணவும், அராஜக நிலையைத் தவிர்க்கவும் தகுதியான ஒருவரை உடனடியாக கணக்காய்வாளர் நாயகமாக ஜனாதிபதி நியமிக்க வேண்டும்." என்று தெரிவித்துள்ளார்.

# லிட்ரோ எரிவாயு விலையில் இந்த மாதம் மாற்றமில்லை

ஜனவரி மாதத்திற்கான சமையல் எரிவாயு விலைகளில் எவ்வித திருத்தங்களும் மேற்கொள்ளப்பட மாட்டாது என லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

12.5 கிலோகிராம் சிலிண்டர் 3,690 ரூபா, 05 கிலோகிராம் சிலிண்டர் 1,482 ரூபா, 2.3 கிலோகிராம் சிலிண்டர் 694 ரூபாவாகும்.

இதேவேளை, கடந்த 02ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் சமையல் எரிவாயு விலைகளை அதிகரிப்பதற்கு லாஃப்ஸ் நிறுவனம் நடவடிக்கை எடுத்தது.

12.5 கிலோகிராம் சிலிண்டர் 4,250 ரூபா, 05 கிலோகிராம் சிலிண்டர் 1,710 ரூபா ஆகும்.



# ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைவதற்கு ஐ.தே.க. செயற்குழுவில் இணக்கப்பாடு

## வஜிர அபேவர்த்தன தெரிவிப்பு



ஐக்கிய தேசிய கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி இணைந்து செயற்பட சஜித் பிரேமதாஸவினால் முன்மொழியப்பட்ட பிரேரணைகளுக்கு கட்சியின் செயற்குழுவில் இணக்கப்பாடு தெரிவிக்கப்பட்டதாக ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அரசியல் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில்,

“ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் 8 ஆவது நிறைவேற்றுத் தலைவருமான ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் செவ்வாய் கிழமை ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு கூடியது. இதன்போது ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி அகிய இரண்டு கட்சிகளுக்கிடையில் எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய முறை தொடர்பில் நீண்ட நேரம் ககலந்துரையாடப்பட்டது.

குறிப்பாக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் அழைப்பின் பேரில், ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு உறுப்பினர்கள் சிலர் அண்மையில் சந்தித்து கலந்துரையாடி இருந்தது. அந்த கலந்துரையாடலின்போது சஜித் பிரேமதாஸவினால் முன்மொழியப்பட்ட விடயங்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவிற்கு உத்தியோகபூர்வமாக சமர்ப்பிக்கப்பட்டன.

அதன் பிரகாரம் இரண்டு கட்சிகளும் இணைந்து செயல்பட முன்மொழியப்பட்ட பிரேரணைகளுக்கு கட்சியின் இணக்கப்பாடுதெரிவிக்கப்பட்டது.அத்துடன்சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களை கருத்திற்கொண்டு ஐக்கிய தேசிய கட்சி சமர்ப்பித்த விடயங்களுக்கமைய சில பிரேரணைகளை ஐக்கிய மக்கள் சக்திக்கு சமர்ப்பிக்க தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் இரண்டு கட்சிகளாலும் சமர்ப்பிக்கபட்ட பிரேரணைகளை செயற்படுத்தவும் குறிப்பாக ஐக்கிய தேசிய கட்சிக்கு ஐக்கிய மக்கள் சக்தியினால் தெரிவிக்கப்பட்டிருந்த பிரேரணைகளை செயற்பாடுக்கு கொண்டுவரவரும் இரண்டு கட்சிகளின் தலைவர்களின் அனுமதியுடன் குழுவொன்றை நியமிக்கவும் இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

இந்த வேலைத்திட்டத்துக்கு இணக்கம் ஏற்பட்ட பின்னர் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் ஆகிய இருவரும் நேரடியாக சந்தித்து கலந்துரையாடவும் கட்சியின் செயற்குழுவில் இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க எந்த சந்தர்ப்பத்திலும் ஐக்கிய தேசிய கட்சியை பாதுகாப்பதற்கே செயற்பட்டார் என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

உதாரணமாக 2019 ஆம் ஆண்டு சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதி வேட்பாளராக்க வேண்டும் என்ற பிரேரணைக்கு அவர் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவராக மற்றும் பிரதமராக இருந்த சந்தர்ப்பத்திலும் ஒரு அடி பின்னுக்கு சென்று சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதி வேட்பாளராக பெயரிட்டது கட்சியின் பாதுகாப்புக்காகும் என்பதை நனைவுபடுத்த விரும்புகிறேன்.

அதேபோன்று ரணில் விக்ரமசிங்க எந்த சந்தர்ப்பத்திலும் கட்சியின் பாதுகாப்புக்கும் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திறம் தொடர்பாகவும் சிந்தித்தே செயற்பட்டுள்ளார். எவ்வாறு இருந்தாலும் ஐக்கிய தேசிய கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் ஒன்றாக இணைந்து செயற்படுவதற்கு எந்த தடைகளும் இல்லை.

இரண்டு கட்சிகளிலும் ஒரே கொள்கையை பின்பற்றுகின்ற குழுக்கள் பிரதிநிதித்துவம் செய்வதால், அந்த ஒற்றுமையை முன்னெடுத்து செல்வதற்காக எந்த தடைகளும் ஒருபோதும் தலைதூக்கப்போவதில்லை. தலைமைத்துவம் தொடர்பாகவும் பிரச்சினை எழப்போவதில்லை என்பதை உறுதியாக தெரிவிக்க முடியும்.

நாட்டின் பொருளாதார மற்றும் சமூகப் பிரச்சினைகளைத் தீர்க்க ஐக்கிய தேசியக் கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் இணைந்து செயல்படுகின்றன என்பதை இந்த நேரத்தில் நினைவூட்ட விரும்புகிறேன்.” – என்றார்.

# கரவெட்டிப் பகுதியில் 21 பவுண் நகை திருட்டு



கரவெட்டி பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை நள்ளிரவு 21 பவுண் நகை திருடப்பட்டுள்ளதாக நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

நெல்லியடி – கொடிகாம வீதியில் உள்ள கரவெட்டி மத்தி கோவிற்சந்தை பகுதியில் இந்த திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டில் இருந்த மூவர் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்ததைப் பயன்படுத்தி வீட்டை உடைத்த திருடர்கள் அங்கிருந்த 21 பவுண் தங்க நகையை திருடிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# தி.மு.கவின் ஊழல்கள் வெளிப்படுத்தப்படும்

## நயினார் நாகேந்திரன் உறுதி



தி.மு.க. அரசின் ஊழல்கள் மக்கள் மன்றத்தில் விரைவில் வெளிப்படுத்தப்படும் என்று பா.ஜ.க. மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

இதுகுறித்து தனது எக்ஸ் தள பதிவில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, 1,020 கோடி இந்திய ரூபா ஊழல் செய்ததாக அமுலாக்கத் துறை புகார் அளித்ததைதொடர்ந்து, தற்போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகம் விசாரணை நடத்த உத்தரவிட்டுள்ளது. இதே துறையில் பணம் பெற்றுக் கொண்டு அரசு வேலையை விற்று 888 கோடி இந்திய ரூபா ஊழல் புரிந்த புகாரும் அமைச்சர் நேரு மீது உள்ளது.

மேலும், அமைச்சர்கள் துரைமுருகன், அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், காந்தி, முன்னாள் அமைச்சர்கள் பொன்முடி, செந்தில்பாலாஜி மற்றும் மேயர் பிரியா மீதான ஊழல் மோசடிகளைக் கணக்கிட்டால், பெரிய புத்தகமே வெளியிடலாம்.

பூட்டிக் கிடக்கும் ஊழல்கள் அனைத்தும் மக்கள் மன்றத்தில் விரைவில் வெளிப்படுத்தப்படுவது உறுதி. எனவே, மீண்டும் அரியணை ஏறும் தி.மு.கவின் எண்ணம் நிறைவேறாது." என்று குறிப்பிட்டுள்ளார்.





# ஜம்மு காஷ்மீரில் மேற்கொள்ளவிருந்த வெடிகுண்டுத் தாக்குதல் முறியடிப்பு

ஜம்மு காஷ்மீரில் தாக்குதல் நடத்துவதற்காக தயார் செய்யப்பட்டு, பதுக்கி வைக்கப்பட்டிருந்த சக்தி வாய்ந்த வெடிகுண்டை பாதுகாப்பு படையினர் கண்டறிந்து அழித்துள்ளனர்.

ரஜோரி மாவட்டத்தில் உள்ள தனமண்டி தாலுகாவுக்குட்பட்ட கல்லார் வனப்பகுதியில் அடையாளம் தெரியாத சந்தேகத்திற்குரிய நபர்களின் நடமாட்டம் இருப்பதாக பொலிஸார் மற்றும் பாதுகாப்பு படையினருக்கு இரகசிய தகவல் கிடைத்தது.

இதையடுத்து, தீவிர தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட நிலையில் அந்தப் பகுதியில் புதைக்கப்பட்டிருந்த 4 கிலோ வெடிமருந்துகள் நிரப்பிய சக்தி வாய்ந்த வெடிபொருளை பாதுகாப்பு படையினர் கண்டறிந்தனர்.

இதையடுத்து, வெடிகுண்டு நிபுணர்கள் உதவியுடன் வெடிபொருளை பத்திரமாக செயலிழக்கம் செய்யப்பட்டு, அழிக்கப்பட்டது.

இதில், யாருக்கும் எந்த காயமும் ஏற்படவில்லை.

இதேவேளை ஜம்மு காஷ்மீரில் தாக்குதல் நடத்துவதற்காக தயார் செய்யப்பட்டு, பதுக்கி வைக்கப்பட்டிருந்த சக்தி வாய்ந்த வெடிகுண்டை பாதுகாப்பு படையினர் கண்டறிந்து அழித்தனர்.என்றும், வெற்றிகரமாக சதிச் செயல் முறியடிக்கப்பட்டு விட்டதாகவும் இந்திய இராணுவம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விரைவில் விண்ணில் பாயவுள்ள பி. எஸ். எல். வி-சி62 ஏவுகணை

இஸ்ரோவின் பி.எஸ். எல்.வி-சி62 ஏவுகணை, அன்விஷா என்ற செயற்கைக்கோளுடன் எதிர்வரும் 12 ஆம் திகதி விண்ணில் ஏவப்படுகிறது.

இது குறித்து இஸ்ரோ கருத்து வெளியிட்டுள்ளது.



அதில், விவசாயம், நகர்ப்புற திட்டமிடல், சுற்றுச்சூழல் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு உள்ளிட்ட பயன்பாடுகளுக்கு செயற்கை கோள்கள் பேருதவியாக உள்ளன.

இதற்கென தயார் செய்யப்பட்டுள்ள அன்விஷா செயற்கைக்கோள், பி.எஸ். எல்.வி சி 62 ஏவுகணை மூலம் எதிர்வரும் 12 ஆம் திகதி காலை 10:17 மணிக்கு விண்ணில் ஏவப்படுகிறது.

ஆந்திரா மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ்தவான் விண்வெளி மையத்தில் இருந்து இந்த ஏவுகணை ஏவப்படுகிறது.

அன்விஷா செயற்கை கோளுடன் ஒரு ஐரோப்பிய செயற்கைக்கோள் மற்றும் பெங்களூரு, ஹைதராபாத், மொரீஷியஸ் மற்றும் ஸ்பெயின் ஆகிய நாடுகளால் உருவாக்கப்பட்ட 18 சிறிய செயற்கைக்கோள்களும்சுற்றுவட்டபாதையில் செலுத்தப்பட உள்ளன என இஸ்ரோ கூறியுள்ளது.




# அமெரிக்காவில் குடிவரவு அதிகாரிகள் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் பெண் பலி

அமெரிக்காவின் மினியாபோலிஸ் நகரில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவத்தில் 37 வயதுடைய ரெனீநிக்கோல்குட் என்ற பெண் உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

ட்ரம்பின்புதியகுடியேற்றக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை அடிப்படையாக கொண்டு குடிவரவு அதிகாரிகளால் இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மினியாபோலிஸ் நகரின் தெற்குப் பகுதியில் உள்ள பழமையான புலம்பெயர் சந்தைகளுக்கு அருகில் இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் நிர்வாகத்தின் கீழ் முன்னெடுக்கப்படும் மிகத் தீவிரமான சட்டவிரோதக் குடியேற்றத் தடுப்பு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாகவே இந்தச் சம்பவம் பார்க்கப்படுவதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சம்பவத்தையடுத்து அமெரிக்கா முழுவதும் பாரிய கொந்தளிப்பு ஏற்பட்டதுடன், சம்பவ இடத்தை திரண்ட நூற்றுக்கணக்கான பொதுமக்கள், அங்கிருந்த உள்ளூர் பொலிஸார் மற்றும் மத்திய அதிகாரிகளுக்கு எதிராகக் கடும் கோஷங்களை எழுப்பினர்.

லொஸ் ஏஞ்சல்ஸ் மற்றும் சிகாகோ போன்ற நகரங்களில் இதற்கு முன்னர் இடம்பெற்ற குடியேற்ற எதிர்ப்புப் போராட்டங்களைப் போன்றே, இங்கும் மக்கள் விசில்களை ஊதி அதிகாரிகளுக்குத் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கருத்து தெரிவித்துள்ளார்.

அந்தப் பெண் காரால் அதிகாரியை மோத முயன்றமையே காரணம் என டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இது போன்ற சூழ்நிலைகளில் வாகனத்தை நோக்கிச் சுடுவது ஏற்றுக் கொள்ளத்தக்கதா என்று ட்ரம்பிடம் செய்தியாளர்கள் கேட்டதற்கு, ட்ரம்ப் பதிலளிக்கையில்,

“அவர் மிகவும் மோசமாக நடந்து கொண்டார். அவர் அதிகாரியை காரால் மோதினார். அவர் மோத முயற்சிக்க மட்டும் செய்யவில்லை, மோதிவிட்டார்” என்று கூறினார்.

பின்னர், அந்த துப்பாக்கிச்சூடு தொடர்பான காணொலி காட்சிகளை ட்ரம்ப் திரையிட்டுக் காட்டினார்.

”இது போன்ற சம்பவங்கள் நடப்பதை நான் விரும்பவில்லை” என ட்ரம்ப் கூறினார்.

இந்தச் சம்பவத்தை வன்முறையானது என்று விவரித்த அவர், “அங்கு நடந்த சூழல் மிகவும் கொடூரமானது” என்று குறிப்பிட்டார்.

# பாகிஸ்தான் - பங்களாதேஷின் இடையில் 14 ஆண்டுகளின் பின் நேரடி விமான சேவை



ஒரு தசாப்தத்திற்கும் மேலான காலப் பகுதியின் பின்னர் பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் இடையிலான நேரடி விமான சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என டாக்காவின் தேசிய விமான நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதன்படி, பிமான் பங்களாதேஷ் ஏர்லைன்ஸ் தனது முதல் டாக்கா-கராச்சி விமானத்தை ஜனவரி 29 அன்று இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும் இது வாரத்திற்கு இரண்டு முறை இயக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் 2012 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இரு நாடுகளுக்கு இடையிலான நேரடி விமான சேவை ஆரம்பிக்கப்படுகிறது.

நேரடி விமானங்களை மீண்டும் தொடங்குவது பங்களாதேஷ் மற்றும் பாகிஸ்தானுக்கு இடையேயான இணைப்பை கணிசமாக மேம்படுத்துவதுடன், வணிக மற்றும் சுற்றுலா மேம்பாட்டுக்கும் பங்களிக்கும் என்று பிமான் பங்களாதேஷ் ஏர்லைன்ஸ் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

2024 நவம்பரில் கராச்சியிலிருந்து பங்களாதேஷின் முக்கிய துறைமுகமான சிட்டாகாங்கிற்கு சரக்குக் கப்பல்கள் மீண்டும் பயணம் செய்தன.

கடந்த மாதம், பங்களாதேஷிக்கான பாகிஸ்தான் உயர் ஆணையர் இம்ரான் ஹைதர், தலைமை ஆலோசகர் பேராசிரியர் மொஹமட் யூனுஸ்டனான சந்திப்பின் போது, ஜனவரியில் கராச்சிக்கும் டாக்காவிற்கும் இடையே நேரடி விமானங்கள் தொடங்கும் என்று நம்பிக்கை தெரிவித்திருந்தார்.

பதவி நீக்கம் செய்யப்பட்ட பிரதமர் ஷேக் ஹசீனாவின் ஆட்சிக் காலத்தில் பாகிஸ்தானுக்கும் பங்களாதேஷிக்கும் இடையிலான உறவுகள் நிலையற்றதாகவே இருந்தன.

எனினும், அவரது அரசாங்கத்திற்கு எதிரான மக்கள் கிளர்ச்சி மற்றும் அதைத் தொடர்ந்து அவர் நாடுகடத்தப்பட்டதைத் தொடர்ந்து, இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் குறிப்பிடத்தக்க அளவில் மேம்பட்டன.

அண்மையில் பாகிஸ்தானின் தேசிய சட்டமன்ற சபாநாயகர் அயாஸ் சாதிக், டிசம்பரில் நாட்டின் முதல் பெண் பிரதமர் கலீதா ஜியாவின் இறுதிச் சடங்கிற்காக டாக்கா சென்றார்.

2025 ஆகஸ்டில் துணைப் பிரதமரும் வெளியுறவு அமைச்சருமான இஷாக் தாரும் டாக்காவிற்குச் சென்று யூனுஸைச் சந்தித்தமை குறிப்பிடத்தக்கது.

# இன்றைய ராசி பலன்கள் - 09.01.2025




இன்று முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். உங்கள் இலக்குகளை எளி தில் அடையலாம். இன்று எடுக்கும் முக் கிய முடிவுகள் நல்ல பலன்களைத் தரும்.

இன்று வளர்ச்சி காணப்படுகின்றது. பணியில் மும்மரமாக காணப்படுவீர்கள். திட்டமிடுவதன் மூலம் திறமையாகப் பணியாற்றலாம்.

உங்கள் துணையிடம் நகைச்சுவை உணர்வை வெளிப்படுத்துவீர்கள். இதனால் இருவருக்கு மிடையிலான உறவுப் பிணைப்பு வலுப்படும்.

பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமாக இருக்கும். உங்கள் தேவைகளை சமாளிக்க சிறிய அளவிலான கடன்கள் வாங்குவீர்கள்.

இன்று நல்ல ஆரோக்கியம் காணப்படும். ஆரோக் கியக் குறைபாடு ஏதும் இருக்காது.




உங்கள் இலட்சியங்களை அடைவதற்கு இன்று சாதகமான நாள். இன்றைய நாளின் செயல்களை நீங்கள் எச்சரிக்கையுடனும் விவேகத்துடனும் செய்வீர்கள். சமயோஜித புத்தியின் மூலம் செயல்படுவதால் நல்ல பலன்கள் கிடைக்கும்.

பணியின் செயல்திறனில் வளர்ச்சி காண்பீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் அர்ப்பணிப்புடன் பழகுவீர்கள். உங்களின் இந்த அணுகுமுறை காரணமாக உறவில் மகிழ்ச்சி நிலவும்.

உங்களின் கடின உழைப்பின் மூலம் .ஊக்கத் தொகை மற்றும் சலுகை வகையில் சில கூடுதலான பணம் பெறுவீர்கள்.

அமைதியான மனநிலை காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று பதற்றமான சூழ்நிலை காணப்படும். பொறுமையுடனும் உறுதி யுடனும் நீங்கள் சமாளிக்க வேண்டும். விஷயங்கள் உங்கள் கட்டுப்பாட்டை மீறிக் காணப்படும். அமைதியான அணுகுமுறை கொண்டு கையாள வேண்டும்.

உங்கள் பணிகளை திறமையாக ஆற்ற இயலாது. சகபணியாளர்கள் ஒத்துழைக்க தவறுவார்கள். மேலதி காரிகளின் பாராட்டும் கிடைக்காது.

உங்கள் துணையிடம் வன்மையான போக்கை காண்பித்து கடுமையாகப் பேசுவீர்கள். மகிழ்ச்சியை தக்க வைக்க இத்தகைய போக்கை கைவிட வேண்டும்.

வரவை விட செலவு அதிகமாக இருக்கும். நிதி நிலையை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள். அதி கரிக்கும் பொறுப்புகள் காரணமாக உங்கள் வங்கி யிருப்பை பராமரிப்பது கடினமாக உணர்வீர்கள்.




இன்று பணிகள் அதிகமாக காணப் படும். உங்கள் இலக்குகளை நீங்கள் அடைவீர்கள். முக்கியமான முடிவுகள் எடுக்க இது உகந்த நாள்.

சக பணியாளர்கள் உதவ- ிகரமாக இருப்பார்கள். பணியில் உங்கள் திற மைகளை வெளிப்படுத்துவீர்கள்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல் வீர்கள். இதனால் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்வீர்கள்.

பணப்புழக்கம் அபரிமிதமாக இருக்கும். சுப நிகழ்ச்சிகளுக்கு பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று உற்சாகத்துடன் காணப்படுவீர்கள். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




முக்கியமான நேரங்களில் நீங்கள் பொறுமை இழந்து காணப்படுவீர்கள். இது உங்களின் வளர்ச்சியை பாதிக்கும். பெரியவர்களின் ஆலோசனை கேட்டு நடந்து கொள்வது சிறந்த பலனைத் தரும்.

இன்று பணியில் மிதமான வளர்ச்சியே காணப் படும். பணிகள் அதிகமாக காணப்படும். இதற்கு நேரம் செலவாகும். உங்கள் கீழ் பணிபுரிபவர்களுடனான உறவு சிறப்பாக இருக்காது.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுவீர்கள். பாதிப்பு தரக்கூடிய அத்தகைய உணர்வுகளை தவிர்த் தால் உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

பணப்புழக்கம் ஏமாற்றத்தை அளிக்கும் விதமாக இருக்கும். அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக உங்கள் அடிப்படைத் தேவைகளை சமாளிப்பது கூட கடினமாக இருக்கும்.




இன்று நீங்கள் அமைதியின்றி உணர்ச்சி வசப்பட்டு இருக்கும் வகை யிலான சூழ்நிலை காணப்படும். இன்று சமநிலையோடு இருக்க வேண்டும். ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதல் மற்றும் வளர்ச்சியை அளிக்கும்.

திறமையாக பணியாற்ற பணிகளை ஆற்றும் போது கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். இன்று பணிகள் அதிகமாக காணப்படும்.

இன்று உங்கள் துணையுடன் பேசும் போது கவன மாக, பேசுவதற்கு முன் யோசித்து பேச வேண்டும்.

இன்று பயணத்தின் போது பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. பணத்தைக் கையாளும் போது கவனம் தேவை.

உங்கள் தந்தையின் உடல் நலத்திற்காக பணத்தை செலவு செய்ய நேரும். நெஞ்செரிச்சல் காரணமாக உங்கள் தந்தை அவதிப்பட நேரலாம்




இன்று செழிப்பாக இருக்க நீங்கள் கடுமையாக முயற்சிக்க வேண்டும். இன்று நல்ல பலனடைய அதிர்ஷ்டமான நாள். விரைந்து முடிவெடுத்தல் மற்றும் இடைவிடாத முயற்சி மூலம் இது சாத்தி யம். இந்து மகிழ்ச்சி கரமான நாளாக இருக்கும்.

இன்று பணியிடத்தில் திருப்தி காணப்படும். உங்கள் திறமைகளை நிரூபிப்பதற்கான புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

உங்கள் துணையிடம் அன்பை வெளிப்படுத்துவீர்கள். இதனால் இருவருக்கும் இடையே உறவுப் பிணைப்பு வலுப்படும்.

இன்று பணப்புழக்கம் அதிகமாக காணப்படும். இன்று உங்களுக்கு ஊக்கத் தொகை போன்ற வகை யில் விரைவாகப் பணம் கிடைக்கும்.




உங்கள் லட்சியங்களை அடைய இன்று சாதகமான நாள். இன்று மகிழ்ச்சியான தருணங்கள் காணப் படும். முக்கிய முடிவுகள் எடுப்பது நல்ல பலனைத் தரும்.

புதிய வாய்ப்புகள் உங்களுக்கு நல்ல பலன் தரும். உங்கள் பணிகளை முடிக்க ஏதுவான சூழ்நிலை காணப்படும்.

உங்கள் துணையுடன் நட்பு முறையோடு பழகுங்கள். உங்கள் வீட்டில் நடக்கவிருக்கும் முக்கியமான விழா பற்றி கலந்தாலோசிப்பீர்கள்.

நிதி வளர்ச்சி இன்று ஸ்திரமாக இருக்கும். சேமிப்பின் மூலம் உங்கள் நிலை உயரும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். திருப்தியான மன நிலை காரணமாக நல்ல உடல் நிலை காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 09.01.2025




இன்று மிதமான பலன்களே கிடைக்கும். இன்றைய கடினமான சூழ்நிலைகளை சமாளிக்க தேவையான ஆற்றலை வளர்த்துக் கொள்ள வேண்டும். உங்கள் மனதை ஆன்மீகத்தில் ஈடுபடுத்துவதன் மூலம் உங்களுக்கு ஆறுதல் கிடைக்கும்.

பணியிடத்தில் சில சவால்கள் காணப்படும். ஆனால் திட்டமிட்டு செயலாற்றினால் சமாளிக்கலாம். ஈடுபாட்டுடன் பணி செய்தால் சிறந்த பலன்கள் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் உரையாடும் பொழுது கவனம் தேவை. உங்கள் பிரியமானவருடன் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளது.

தேவையற்ற செலவினங்கள் காணப்படுவதால் கவனமாகச் செலவு செய்ய வேண்டும். நிதி வளர்ச்சியில் சில தடைகளை எதிர்கொள்வீர்கள்.




உங்களிடம் அமைதியின்மை மற்றும் பாதுகாப்பின்மை உணர்வு காணப்படும். இதனால் உங்கள் தன்னம்பிக்கை குறையும். என்றாலும் வெற்றி பெற நீங்கள் உற்சாகமாக முயல வேண்டும்.

உங்கள் மதிப்பை உங்கள் மேலதிகாரிகளிடம் நிரூபிக்க வளர்ச்சியை உண்டாக்கும் புதுமையான யோசனைகள் தேவை. இன்று பணிகளை சரியான நேரத்தில் முடிக்க இயலாது.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்படக் கூடாது. நல்லுறவைப் பராமரிக்க சகஜமான அணுகுமுறையும் அனுசரித்து நடந்து கொள்ளவும் வேண்டும்.

குடும்பத் தேவைக்காக நீங்கள் செலவு செய்ய நேரும். அது தேவையற்ற செலவாக இருக்கும். அதிக செலவு காரணமாக சேமிப்பதற்கான வாய்ப்பு குறைவு.

உங்கள் கண்களில் கவனம் செலுத்த வேண்டும்.




உங்கள் இலக்குகளை அடைய கடுமையாகப் போராட வேண்டும். திட்டமிட்டு நம்பிக்கையுடன் செயலாற்ற வேண்டும். அஞ்சாத மன ஆற்றலும் நம்பிக்கையும் கொண்டால் உங்கள் விருப்பங்கள் நிறைவேறும்.

இன்று நீங்கள் பொறுமையுடன் செயற்பட்டால் உங்கள் பணிகளை சிறப்பாக ஆற்ற இயலும். உங்களுக்கு கொடுக்கப்பட பணிகளைச் செய்யும் போது யோசித்து சிறப்பாக ஆற்ற வேண்டும்.

குடும்ப பிரச்சினை காரணமாக தம்பதியரிடையே கருத்து வேறுபாடு காணப்படும். எனவே நட்பு முறையோடு அணுகினால் நல்லுறவைப் பராமரிக்கலாம்.

இன்று ஏற்படும் கூடுதல் செலவு காரணமாக உங்களுக்கு வருத்தம் ஏற்படும். இது தவிர்க்க முடியாதது. செலவுகளை கண்காணியுங்கள்.




இன்று நன்மை தீமை எனப் பலன்கள் கலந்து காணப்படும். இன்று நிச்சயமற்ற தன்மை காணப்படும். முயற்சியில் வெற்றி பெறுவதற்கு மிகுந்த பொறுமை அவசியம்.

இன்று கவனக் குறைவு காணப்படும். உங்கள் செயல் திறன் மந்தமாக இருக்கும். பனியின் போது கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் பேசும் போது சகஜமாக இருக்க வேண்டும். அவரி கருத்துக்களை கவனமாக கேட்பதன் மூலம் உறவில் மகிழ்ச்சி நிலவும்.

செலவினங்கள் அதிகமாக காணப்படும். பாதுகாப்பிற்காக சேமிப்பு பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் காணப்படும். உணவு முறையில் கவனம் தேவை. முறையான சிகிச்சையால் விரைவில் குணம் கிடைக்கும்.

# பெரும் மழையை எதிர்கொள்ளும் தயார் நிலையில் யாழ். மாவட்டம்

## தீவகக் கடல் போக்குவரத்து இடைநிறுத்தம்

யாழ் மாவட்டத்தில் கணிசமான மழை பெய்யும் பட்சத்தில் அதனால் ஏற்படக் கூடிய நெருக்கடிகளை எதிர்கொள்ளத் தக்க வகையில் சகல பிரதேச செயலாளர்களும் அரச உத்தியோகத்தர்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர் என மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என். சூரியராஜா தெரிவித்தார்.

யாழ் மாவட்ட செயலகத்தில் நேற்றுக் கருத்து தெரிவித்த போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வங்களா விரிகுடாவின் தென்கிழக்கு பகுதியில் ஏற்பட்ட தாழமுக்கம் காரணமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் சீரற்ற காலநிலை தொடர்ச்சியாக காணப்படுகிறது.

யாழ் மாவட்டத்திற்குரிய தீவகக் கடல் போக்குவரத்துகளும் இன்றிலிருந்து (நேற்றிலிருந்து) மறு அறிவித்தல் வரை நிறுத்தப்பட்டுள்ளன. மீனவர்களை



கடற்றொழிலுக்குச் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களத்தின் அறிக்கையின் பிரகாரம் யாழ் மாவட்டத்திற்கு 9 ஆம், 10 ஆம் திகதிகளில் (இன்றும் நாளையும்) கூடுதலான மழை வீழ்ச்சி – அதாவது 100 மில்லிமீற்றர் அளவில் – கிடைப்பதற்கான அறிகுறி காணப்படுகிறது.

யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபரின் தலைமையில் கீழ் அனைவரையும் உள்ளடக்கி அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

இதன்போது அரச அதிபரினால் சகல பிரதேச செயலர்களுக்கும் தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. குறிப்பாக சகல கிராமமட்ட அலுவலர்களுக்கும் பிரதேச செயலாளர்களுக்கும் அனர்த்த நிலைமைகள் தொடர்பான அறிவித்தல்கள் வழங்கப்பட்டன.

வளிமண்டலவியல் திணைக்களத்தினால் பகிரப்படும் தகவல்கள் உடனடியாகவே எமது பங்குதாரர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. சகல கிராமமட்ட உத்தியோகத்தர்களுக்கும் இது சம்பந்தமான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருக்கின்றமையால் மக்கள் பீதியடைய தேவையில்லை. – என்றார்.